**தலைப்பு 180 – சிறு ஏற்றுமதி பயிர்கள் மேம்படுத்தல் அமைச்சு மற்றும் அந்த அமைச்சின் கீழுள்ள திணைக்களம் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2013 ஆம் ஆண்டு**

இந்த அறிக்கை இரண்டு பகுதிகளை உள்ளடக்கியுள்ளது.

1 ஆம் பகுதி - அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்தின் கணக்குகள் தொடர்பான சுருக்கமான அறிக்கை

2 ஆம் பகுதி - ஒவ்வொரு ஒதுக்கீட்டுத் தலைப்புக்குமான விபரமான அறிக்கை

## 1 ஆம் பகுதி

**சிறு ஏற்றுமதி பயிர்கள் மேம்படுத்தல் அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்தின் கணக்குகள் மீதான சுருக்கமான அறிக்கை**

**1. அமைச்சின் கீழுள்ள திணைக்களம்**

| தலைப்பு | திணைக்களத்தின் பெயர் |
|---|---|
| 289 | விவசாய ஏற்றுமதி திணைக்களம் |

**2. கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**(அ) மொத்த ஏற்பாடும் செலவும்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்திற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த மொத்த தேறிய ஏற்பாடு ரூபா 957,875,000 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரை இதில் ரூபா 747,801,019 பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க அமைச்சினதும் திணைக்களத்தினதும் தேறிய ஏற்பாடுகளிலிருந்தான சேமிப்புக்கள் முறையே ரூபா 36,141,717 மற்றும் ரூபா 173,932,264 அல்லது தேறிய ஏற்பாட்டில் முறையே 17 சதவீதம் மற்றும் 23 சதவீதம் ஆகக் காணப்பட்டன. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| தலைப்பு | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
| | ரூபா | ரூபா | ரூபா | |
| 180 | 212,890,000 | 176,748,283 | 36,141,717 | 17 |
| 289 | 744,985,000 | 571,052,736 | 173,932,264 | 23 |
| **மொத்தம்** | **957,875,000** | **747,801,019** | **210,073,981** | **22** |

## 2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

### பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்திற்காக அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| விடய இல. | செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | அதிகூடிய எல்லை | உள்ளபடியானவை | ஆகக்குறைந்த எல்லை | உள்ளபடியானவை | அதிகூடிய எல்லை | உள்ளபடியானவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 18001 | 3,500,000 | 2,222,671 | 900,000 | 2,116,987 | 10,000,000 | 6,382,237 |
| 28901 | 31,000,000 | 18,833,176 | 20,000,000 | 26,630,969 | 118,000,000 | 82,334,865 |

## 2.3 கட்டுநிதி மற்றும் பொது வைப்புக் கணக்குகள்

### 2.3.1 கட்டுநிதிக் கணக்கு

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் கட்டுநிதி மீதிகள் ரூபா 573 ஆகஇருந்தது.

### 2.3.2 பொதுவைப்புக் கணக்கு

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்தின் பொதுவைப்புக் கணக்குகளிலுள்ள மீதிகள் ரூபா 3,207,738 கூட்டுமொத்தமாக இருந்தது. விபரம் கீழே காட்டப்பட்டுள்ளது.

| அமைச்சு/ திணைக்களம் | பொதுவைப்புக் கணக்கு இல. | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|---|
| | | ரூபா |
| சிறு ஏற்றுமதி பயிர்கள் மேம்படுத்தல் அமைச்சு | 6000/0000/00/0015/0189/000 | 71,844 |
| ஏற்றுமதி விவசாயத் திணைக்களம் | 6000/0000/00/0015/0144/000 | 3,135,894 |
| மொத்தம் | | 3,207,738 |

## 2 ஆம் பகுதி

## ஒவ்வொரு தலைப்பு தொடர்பான விபரமான அறிக்கை

### 1 தலைப்பு 180 – சிறு ஏற்றுமதிப் பயிர்கள் ஊக்குவிப்பு அமைச்சு

### 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

சிறு ஏற்றுமதிப் பயிர்கள் ஊக்குவிப்பு அமைச்சின் 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதியறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2014 ஆகஸ்ட் 08 ஆம் திகதி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள், மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகளது, போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தது.

### 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரச நிதி மற்றும் நிர்வாக பிரமாணங்களுக்கு இணங்க பேணப்பட்டு வருதல், தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தல் பிரதான கணக்களிப்பு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற வகையிலான கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பிக்கப்படுவதற்குரிய உள்ளகக்கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் நடாத்தலும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

## 1.3 கணக்காய்வு அவதானிப்புகள்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதியறிக்கைகள் மற்றும் புத்தகங்களின் பிரகாரம், சிறு ஏற்றுமதிப் பயிர்கள் ஊக்குவிப்பு அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் என்பன இதன் (அ) இல் காண்பிக்கப்பட்டுள்ள பொது அவதானிப்புக்கள் மற்றும் 1.4 முதல் 1.6 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புகள் என்பவற்றை தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளதென அவதானிக்கப்பட்டுள்ளது.

### (அ) பாதீட்டு முரண்கள்

(i) 09 செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த காரணத்தால் ஏற்பாடு பயன்படுத்தப்பட்டதை அடுத்து எஞ்சிய அச் செலவின விடயங்களுக்கு உரித்தான தேறிய ஏற்பாட்டில் 28 சதவீதத்திற்கும் 98 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சளவைக் கொண்டிருந்தது.

(ii) அமைச்சு இயங்கும் கட்டிடம் விவசாய அமைச்சிற்குச் சொந்தமானதால் மின்சாரம் மற்றும் நீரிற்காக மேற்கொள்ளப்பட்ட ஏற்பாட்டைப் பயன்படுத்துவதற்குத் தேவையில்லை என கடந்த ஆண்டின் போதும் ஏற்பாட்டின் சேமிப்பிற்கான காரணமாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போதும் ரூபா 400,000 தொகையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு அவ் ஏற்பாடு வேறு செலவின விடயங்களுக்காக மாற்றப்பட்டிருந்தன. எஞ்சிய மொத்த ஏற்பாடும் செலவிடப்படாது சேமிப்பிற்கான காரணமாக அக் காரணமே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

## 1.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 1.4.1 தீர்க்கப்படாத பொறுப்புகள்

அமைச்சால் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆண்டிற்குக் குறைவான தீர்க்கப்படாத பொறுப்புகள் ரூபா 3,837,871 தொகையானதுடன் அத்திகதியில் உள்ளவாறான 04 பொறுப்புகளின் பெறுமதியான ரூபா 34,076 தொகையும் இதில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.5 செயலாற்றல்

2013 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி அமைச்சின் முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறாகும்.

### (அ) போதியளவில் மேற்கொள்ளப்படாத பிரதான செயற்பாடுகள்

அமைச்சின் பிரதான செயற்பாடாக வாசனைத் திரவியங்கள் மற்றும் அதனோடொத்த பொருட்களின் உற்பத்தி விற்பனைச் சபையின் சொத்துக்களைப் பாதுகாப்பதாகக்

குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அச் சபையின் சொத்துக்கள் 2009 ஆம் ஆண்டின் போது ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், அதன் கலைப்புக் கணக்குகள் தயாரிக்கப்பட்டு சபையைக் கலைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) திட்டமிடல்

வருடாந்த செயற்பாட்டுத் திட்டத்திற்கிணங்க செயற்படாமை

பின்வரும் சந்தர்ப்பங்களின் போது செயற்பாட்டுத் திட்டத்திற்கிணங்க செயற்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(i) மடுப் பகுதி மற்றும் வட பகுதிக்குரித்தான மாவட்டங்களில் மரமுந்திரிகைப் பயிர்ச்செய்கை மேம்பாட்டிற்கான நிகழ்ச்சித்திட்டமொன்று தயாரித்தல்.

(ii) விவசாய அமைப்புகளை உறுதிப்படுத்தி பலப்படுத்தும் 03 நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்தல்.

(iii) புதிய 02 வாசனைத் திரவியங்களை அறிமுகப்படுத்தல்.

## 1.6 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளபடியான பதவியணியினர்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 14 | 08 | 06 |
| (ii) | மூன்றாம் நிலை | 01 | 01 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 51 | 29 | 22 |
| (iv) | ஆரம்ப நிலை | 27 | 23 | 04 |
| (v) | ஏனையவை (அமைய/ தற்காலிக /ஒப்பந்த அடிப்படை) | 02 | 01 | 01 |
| | மொத்தம் | 95 | 62 | 33 |

சிரேஷ்ட நிலையில் 06 வெற்றிடங்கள் உள்ளடங்கலாக 33 பதவிகளை நிரப்புவதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அமைச்சு தவறியிருந்தது.

## 2. தலைப்பு 289 – விவசாய ஏற்றுமதி திணைக்களம்

### 2.1 கணக்காய்வின் நோக்கெல்லை

விவசாய ஏற்றுமதி திணைக்களத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2014 ஆகஸ்ட் 04 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

### 2.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூறறுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக்கூற்று என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

### 2.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் சிறு விவசாய ஏற்றுமதி திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கும் இணக்கக் கூற்றும் இவ்வறிக்கையின் (அ) மற்றும் (இ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் 1.4 இலிருந்து 1.11 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு

அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

**(அ) பதிவேடுகள் நாளதுவரையாக்கப்பட்டிருக்காமை**

1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) பாதீட்டு முரண்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ஒரு செலவின விடயத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 5,000 தொகையான தேறிய நிதி ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) 07 மீண்டெழும் செலவின விடயங்களிற்கும் 13 மூலதன செலவு விடயங்களுக்கும் கூடுதலாக ஏற்பாடு செய்யப்பட்டதன் காரணமாக நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பானது ரூபா 172,264,889 மொத்தமாக காணப்பட்டது. அச்சேமிப்பு ஒவ்வொரு செலவு விடயத்திற்கும் மேற்கொள்ளப்பட்ட தேறிய நிதி ஏற்பாட்டின் 14 சதவீத்திற்கும் 74 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது.

**(இ) பொது வைப்புக் கணக்கு**

2 ஆண்டுகளைத் தாண்டிய ரூபா 1,167,998 தொகையான 33 வைப்புக்கள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று**

28901 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்றின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 இல் அறவீடு நிலுவையாகக் காணப்பட்ட மீதிகள் ரூபா 1,015,972 கூட்டுமொத்தமாக இருந்ததுடன் அந் நிலுவை மீதிகளில் ரூபா 355,307 தொகை 11 ஆண்டுகளிற்கும் மேற்பட்ட காலமாக நிலவிவருகின்ற மீதிகளாகும்.

**2.4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கூட்டங்களை நடாத்துதல்**

2013 ஆம் ஆண்டிற்காக 03 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன.

**2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

சொத்துக்கள் முகாமைத்துவம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பிரிசோதனைகளில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

**(அ) விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

கீழே விபரிக்கப்பட்டுள்ளவாறு சில சொத்துக்கள் விளைவற்று அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பிரிசோதனைகளில் அவதானிக்கப்பட்டன.

| | சொத்துக்கள் வகை | எண்ணிக்கை | குறைப் பயன்பாட்டில் காணப்பட்ட காலப்பகுதி |
|---|---|---|---|
| (i) | கூரையினை அங்குமிங்கும் நகர்த்தக்கூடிய விதத்தில் தயாரிக்கப்பட்ட கட்டிடம் | 01 | மிகப் பழையது |
| (ii) | கட்டிடங்கள் (பொருத்துக்களுடன்) | 01 | 2009 முதல் |
| (iii) | இயந்திரங்களும் உபகரணங்களும் | 07 | -மேற்படி- |
| (iv) | பொதியிடல் தாள்கள் (தடிப்பமானது) | 10 மீற்றர் கனவளவு | -மேற்படி- |
| (v) | பைண்டிங் ரோல் (பெரியவை) | 30 | -மேற்படி- |
| (vi) | வர்ணப்பூச்சு (10 லீடர்) | 08 | -மேற்படி- |
| (vii) | கணனி இயந்திரங்கள் | 01 | -மேற்படி- |
| (viii) | இரட்டை வழி மின்சார இணைப்பு | 01 | -மேற்படி- |
| (ix) | மிளகு விதைகளை வேறாக்கும் இயந்திரம் | 01 | 2013 முதல் |
| (x) | தரமற்ற மிளகுகளை அகற்றும் இயந்திரம் | 01 | -மேற்படி- |

**(ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கை**

2013 ஆம் ஆண்டிற்குரிய பொருள் மெய்மையாய்வு அறிக்கையினை பரிசோதித்ததில் சில பிரிவுகளில் மெய்மையாய்வு நடவடிக்கைகளிற்காக நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் அதற்காக பயன்படுத்துகின்ற பொது 66 படிவத்தில் பேரேட்டின் படி மீதி மாத்திரம் குறிப்பிடப்பட்டிருந்தது. அந்த படிவத்தின் படி பொருள் மெய்மையாய்வை மேற்கொண்டு உள்ளபடியான மீதி, மேலதிகம் அல்லது குறைவு காண்பிக்கப்படாதிருப்பினும் குறித்த பிரிவுத் தலைவர்களினால் அந்த மெய்மையாய்வு நடவடிக்கைகள் சரியாக மேற்கொள்ளப்பட்டிருந்தன என பொய்யாக குறிப்பிட்டு அறிக்கைகள் சான்றுறுதிப்படுத்தப்பட்டிருந்தன.

**(இ) கையேற்கப்படாத சொத்துக்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்துதல்**

ஆரசாங்க மற்றும் தனியார் நிறுவனங்களுக்குச் சொந்தமான 46 காணிகள் முறையற்ற விதத்தில் கையேற்கப்படாது திணைக்களத்தினால் பயன்படுத்தப்பட்டிருந்தன.

**(ஈ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்**

திணைக்களத்தினால் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 ஆண்டிற்கு குறைவாக தீர்க்கப்படாதுள்ள பொறுப்புக்கள் ரூபா 105,196,568 ஆக காணப்பட்டது.

**2.6 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலிவற்றுடனான இணக்கமின்மை**

கணக்காய்வு தெரிவுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிற்கான தொடர்பு | பெறுமதி<br>ரூபா | இனங்கி ஒழுகாமை |
|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை | | |
| XII ஆம் அத்தியாயத்தின் 23.18 ஆம் பிரிவு | - | அரசாங்க உத்தியோகத்தர்கள் நாட்டுக்கு வெளியே எடுத்துக்கொண்ட விடுமுறைகள் குறித்த அறிக்கையொன்றை திணைக்களத் தலைவர் மாதந்தோரும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பித்திருக்கவில்லை. |

(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் கோவை

----------------------------------------

| | | |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 115(3)(அ) | 300,000 | 2013 ஆகஸ்ட் முதல் நவம்பர் வரையான காலப்பகுதிக்குரிய ரூபா 300,000 மொத்தப் பெறுமதியுடைய கொடுப்பனவுகள் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் அங்கீகாரமின்றி பணிப்பாளர் ஒருவரின் அங்கீகாரத்தின் மீது 2014 ஏப்ரல் மாதம் செலுத்தப்பட்டிருந்தது. |

**2.7 செயற்திட்டங்களை அமுல்படுத்தல் குறைபாடுகள்**

2009 ஆம் ஆண்டில் கொரிய அரசாங்கத்தின் (KOICA) ஒத்துழைப்புச் சங்கத்தினால் வழங்கப்பட்ட உதவியினைப் பயன்படுத்தி 2009 நவம்பர் 16 ஆந் திகதியளவில் கட்டிடமொன்றை நிர்மாணித்து செயற்திட்டத்திற்குத் தேவையான இயந்திரங்கள் பெறப்பட்டு பொருத்தப்பட்டிருந்த போதிலும், 2014 யூலை 17 ஆந் திகதி வரையிலும் செயற்திட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.8 செயலாற்றுகை**

திணைக்களத்தின் பிரதான நோக்கம் ''தேசிய உற்பத்தி இயலளவை அதிகரிப்பதன் மூலம் இறக்குமதிகளை கட்டுப்படுத்தி ஏற்றுமதி மேம்பாட்டுக்கு நடவடிக்கை எடுத்தல்'' என்பதாகும். இதற்காக திணைக்களத்தில் தனியான ஆராய்ச்சிப் பிரிவொன்று நிறுவப்பட்டிருந்த போதிலும், அப் பிரிவினால் அறிமுகப்படுத்தப்பட்ட புத்தாக்கங்களை (வெளியீடுகள்) வெளிக்கொண்டு வருவதற்கு திணைக்களத்தில் தெளிவான வேலைத்திட்டமொன்று காணப்படவில்லை. இதன் காரணமாக 2010 ஆம் ஆண்டிலிருந்து 2013 ஆம் ஆண்டு வரை செயற்படுத்தப்பட்டிருந்த 129 ஆய்வுகளில் 54 ஆய்வுகளின் பெறுபேறுகள் வெளியிடப்படாதிருந்த போதிலும், அவற்றை வெளிக்கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.9 நட்டங்களும் சேதங்களும்**

திணைக்களத்திற்குச் சொந்தமான 02 வாகனங்களிற்கு முறையே 2012 யூன் 26 மற்றும் 2012 திசெம்பர் 12 ஆந் திகதிகளில் சேதம் ஏற்பட்டிருந்ததுடன், நிதிப்பிரமாணம் 104(4) இன் பிரகாரம் பூரண அறிக்கை 2014 மே 30 ஆந் திகதி வரை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.10 தீர்வு காணப்படாதுள்ள கணக்காய்வுப் பந்திகள்**

2014 பெப்ரவரி 20 ஆந் திகதி இடம்பெற்ற அரசாங்க கணக்குகள் குழுக் கூட்டத்தில் திணைக்களத்தினால் வழங்கப்பட்டிருந்த பதிலளித்தல்களின் படி நாலந்த பொதியிடல் நிறுவனத்தின் இயந்திர உபகரணங்களை மாத்தளை எல்வல பயிற்சி நிலையத்தின் பயிற்சி நடவடிக்கைகளிற்கு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், 2014 யூலை 17 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட வெளிக்களப் பரிசோதனையில் அச் சொத்துக்கள் பயன்படுத்தப்படாது மாத்தளை தாவரப் பாதுகாப்பு நிலையக் கட்டிடத்தில் வைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**2.11 மனிதவள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | **ஊழியர் வகை** | **அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை** | **உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை** | **வெற்றிடங்களின் எண்ணிக்கை** | **மேலதிக எண்ணிக்கை** |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 85 | 45 | 40 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 28 | 10 | 18 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 800 | 609 | 191 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 353 | 293 | 60 | - |
| (v) | ஏனையோர் (அமைய/தற்காலிக/ஒப்பந்த அடிப்படை) | 97 | 158 | - | 61 |
| | மொத்தம் | 1,363 | 1,115 | 309 | 61 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியளவில் காணப்பட்ட 309 பதவியணி வெற்றிடங்களை நிரப்பவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

(ஆ) அமைய/தற்காலிக/ஒப்பந்த அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு மேலதிகமாக 61 ஊழியர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்ததுடன், அதற்கான முறையான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.